## நம்முடைய போட்டி இனி டெல்லியுடன் மட்டும் இருக்காது! தெற்கு ஆசியாவுடன்

## அனைத்துத் துறைகளிலும் முதல் மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிக் காட்டுவேன்!

# மண், மொழி, மானம் - மூன்றையும் காப்பாற்ற மூச்சு இருக்கும் வரை போராடுவேன்!



## காணொலியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உணர்ச்சிமிகு உரை!

**சென்னை, ஏப்.23-**

**கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21-04-2026) வெளியிட்ட காணொலி உரையின் விவரம்:-**

**என்னுயிர் மக்களே!**

நம்முடைய தமிழ்நாட்டின் எதிர்காலத்தை நீங்கள் எழுதப்போகும் நாள். உங்களை யாராலும் ஏமாற்ற முடியாது. உங்களுக்குத் தெரியும். எது உண்மை? எது பொய்? எது நடிப்பு? எது உழைப்பு? யார் நரி? யார் சிங்கம்? அடிமைத்தனம் எது? தைரியம் எது? அனைத்துமே உங்களுக்கு நன்றாகவே தெரியும்.

இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை இருக்கிறது. என்னை நம்பி இந்த நாட்டை ஆள என்னிடம் கொடுத்தீர்கள். ஐந்து ஆண்டுகளில் எத்தனையோ துறைகளில், தமிழ்நாட்டை முதலிடத்திற்கு நாம் ஒன்றாகக் கொண்டு வந்திருக்கிறோம். நாம் வீழ்த்திய எதிரிகளின் சதிகளை எண்ண ஆரம்பித்தால், அதற்குள்ளாக தேர்தல் முடிவே வந்துவிடும். நம்முடைய திட்டங்களை, அதனால் விளைந்த நன்மைகளை நான் பட்டியலிட ஆரம்பித்தால், அடுத்த தேர்தலே வந்துவிடும்.

எனக்கு நீங்கள் கொடுத்த கடமையை என்னால் முடிந்த வரைக்கும் சரிவரச் செய்துவிட்டேன். உங்களுடைய கடமையை நீங்களும் சரிவரச் செய்ய வேண்டும்.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இதுவரை யாரும் காணாத ஒரு பெரிய கனவோடு காத்திருக்கிறேன். நம்முடைய போட்டி இனி டெல்லியுடன் மட்டும் இருக்காது. தெற்கு ஆசியாவில் அனைத்துத் துறைகளிலும் முதல் மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றிக் காட்டுவேன். மண், மொழி, மானம் மூன்றையும் காப்பாற்ற மூச்சு இருக்கும் வரைக்கும் போராடுவேன்.

வாக்களிப்பீர், உதயசூரியன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களின் சின்னங்களுக்கு!

தமிழ்நாடு வாக்களிக்கும்! தமிழ்நாடு வெல்லும்!

என்றும் உங்களில் ஒருவன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!

# மீண்டும் கழக ஆட்சி - மக்களின் எழுச்சியே சாட்சி!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, ஏப்.23–**

**மீண்டும் கழக ஆட்சி – மக்களின் எழுச்சியே சாட்சி என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

**அவரது அறிக்கை வருமாறு:–**

சட்டப்பேரவைத் தேர்தல் எனும் ஜனநாயகத் திருவிழா, கிட்டத்தட்ட இறுதிக் கட்டத்தை எட்டி இருக்கிறது. தமிழ்நாட்டு மக்கள் ஓரணியில் திரண்டு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை வெற்றி பெறச் செய்ய ஆயத்தமாகிவிட்டார்கள்.

கடந்த ஒரு நூற்றாண்டாக தமிழ்நாடு போராடிப் பெற்ற உரிமைகளை, நாம் அடைந்த வளர்ச்சிகளைக் காப்பாற்றுவதற்கான தேர்தலே,

**22 நாட்களில்**
**135 தொகுதிகளில் பிரச்சாரம்!**

இந்த சட்டப்பேரவைத் தேர்தல்.

இந்தத் தேர்தல் தி.மு.க. தலைமையிலான தமிழ்நாடு அணிக்கும் - பாசிச பா.ஜ.க. தலைமையிலான டெல்லி அணிக்கும் இடையிலான போட்டி என நம் தலைவர் அவர்கள் ஆரம்பத்திலேயே தெளிவாக அறிவித்தார்கள்.

இந்த ஜனநாயகப் போரில் தலைவர் அவர்களின் கட்டளையை ஏற்று, கடந்த

23 நாட்களில் 135 தொகுதிகளில் கழக வேட்பாளர்கள் மற்றும் நம் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டோம்.

நமது பிரச்சாரத்தை, கடந்த மார்ச் 30-ஆம் தேதி பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில் தொடங்கி, ஏப்ரல் 21-ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நின்று வென்ற சேப்பாக்கம்-திருவல்லிக்கேணியில் நிறைவு செய்திருக்கிறோம்.

சென்ற இடமெல்லாம் மக்களின் எழுச்சி, ஆரவாரம், ஆர்ப்பரிப்பு! கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளும் 'தோழமை' உணர்வுடன் ஒவ்வொரு தொகுதியிலும் உற்சாக வரவேற்பையும் ஒத்துழைப்பையும் அளித்தனர்.

தமிழ்நாட்டு மக்கள், முன் எப்போதும் இல்லாத அளவிற்கு மிகுந்த அரசியல் தெளிவுடன் - விழிப்புணர்வுடன் இருக்கிறார்கள். அரசியல் நிகழ்வுகளை உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள். பாசிசத்தின் சூழ்ச்சிகளை எல்லாம் புரிந்து வைத்திருக்கிறார்கள்.



**பாசிச பா.ஜ.க. – அ.தி.மு.க. கூட்டணி மீது மக்கள் கோபத்தில் உள்ளனர்!**

களம் உணர்த்திய செய்திகள் இவை.

தமிழ்நாட்டை ஆக்கிரமிக்கத் துடிக்கும் பாசிச சக்திகள் மீதும், அதற்கு பாதை அமைத்துக் கொடுக்கும் அடிமைக் கூடாரமான அ.தி.மு.க. மீதும், திரு.எடப்பாடி பழனிசாமி மீதும் மக்கள் கடுங்கோபத்தில் இருக்கிறார்கள்.

பழனிசாமி என்றால் அடிமைத்தனம், பழனிசாமி என்றால் துரோகம், பழனிசாமி என்றால் சூழ்ச்சி - இது மக்களின் மனங்களில் நன்றாகப் பதிந்து இருக்கிறது.

பாசிஸ்ட்டுகளை எந்த அளவுக்கு தமிழ்நாடு எதிர்த்து நிற்கிறதோ, அதே அளவு பாசிஸ்ட்டுகளைத் தோளில் சுமந்து வரும் எடப்பாடி பழனிசாமிக்கும் பாடம் புகட்ட தமிழ்நாட்டு மக்கள் தயாராகி விட்டார்கள்.

தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாக்கும் காவல் அரணாக இருக்கும், நம் கழகத் தலைவர் அவர்கள் மீதான மதிப்பு, மக்களிடையே பன்மடங்கு உயர்ந்திருக்கிறது.

**மாநிலம் முழுவதும் நம் தலைவருக்கும் கழக ஆட்சிக்கும் அமோக ஆதரவு!**

மாநிலம் முழுவதும் நம் தலைவர் அவர்களுக்கு ஆதரவு அலை வீசுகிறது. நமது திராவிட மாடல் அரசின் மக்கள் நலத்திட்டங்களுக்கு மிகுந்த வரவேற்பு இருக்கிறது.

விடியல் பயணம், காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன் திட்டம், தாயுமானவர் திட்டம், மிக முக்கியமாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் என ஒவ்வொரு திட்டத்தைப் பற்றியும் நாம் பேசும்போது, மகளிர், இளைஞர்கள், மாணவர்கள், முதியோர் முகங்களில் ஏற்படும் மகிழ்ச்சியும் உற்சாகமும் நம்மை நெகிழச் செய்தது.

அதுமட்டுமல்ல, நம் தலைவர் அவர்கள் அளித்துள்ள தேர்தல் வாக்குறுதிகள், தமிழ்நாட்டு மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று இருக்கின்றன.

இல்லத்தரசிகளுக்குத் தேவைப்படும் வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கிக் கொள்ளும் வகையில் ரூ.8,000 மதிப்பிலான கூப்பன், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மாதம் ரூ.2,000-ஆக உயர்த்தப்படும், புதுமைப்பெண் - தமிழ்ப்புதல்வன் திட்ட உதவித்தொகை ரூ.1,500-ஆக உயர்த்தப்படும், முதியோர் உதவித் தொகை ரூ.2,000-ஆக உயர்த்தப்படும், காலை உணவுத் திட்டம் 8-ஆம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும், 35 இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கப்படும் போன்ற வாக்குறுதிகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை விதைத்து இருக்கிறது.

எதிர்க்கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளை, வெற்றுக் காகிதங்களாகவே மக்கள் பார்க்கிறார்கள். அவற்றின் மீதெல்லாம் மக்களுக்குத் துளிகூட நம்பிக்கை இல்லை.

**சொன்னதைச் செய்து காட்டும் நம் முதல்வர் மீது அதிக நம்பிக்கை!**

ஆனால், சொன்னதைச் செய்யும், நம் முதலமைச்சர் அவர்கள் தந்துள்ள வாக்குறுதிகளை மக்கள் கொண்டாடுகிறார்கள்.

தீவிர பரப்புரைக்கு இடையே, ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசின் தொகுதி மறுவரையறை மசோதாவைக் கண்டித்து, நமது தலைவர் அவர்கள் கருப்புக்கொடிப் போராட்டத்தை அறிவித்தார்கள்.

தமிழ்நாட்டின் அரசியல் குரலை நெரிக்க முயலும் அந்த மசோதாவுக்கு தலைவர் அவர்கள் நாமக்கல்லில் தீ வைத்தார்கள். நாம் மதுரையில் அந்த மசோதாவுக்கு தீ வைத்தோம்.

'தமிழ்நாடு வெல்லட்டும், டெல்லி ஆதிக்கம் வீழட்டும்' - என்ற போர்முழக்கம் எட்டுத்திக்கும் எழுந்தது.

மறுநாள் நாடாளுமன்றத்தில் அந்த மோசடி மசோதா தோற்கடிக்கப்பட்டது என்ற வெற்றிச் செய்தியை, கோவையில் கூடியிருந்த மக்களிடம் நாம் பகிர்ந்து கொண்டபோது, வாழ்த்து முழக்கங்களும், ஆரவாரமும் அடங்க வெகுநேரம் ஆனது.

இதன் மூலம், தேர்தல் பரப்புரைக் களத்தையே, போராட்டக் களமாக மாற்றி அதில் வெற்றிவாகைச் சூடி நமது தலைவர் அவர்கள் புது வரலாறு படைத்துள்ளார்!

நாடாளுமன்றத்தில் நாம் பெற்ற இந்தச் சரித்திர வெற்றி, நாளைய சட்டமன்றத் தேர்தலில் நிச்சயமாக எதிரொலிக்கும்.

'வெல்வோம் 200' என்ற இலட்சியத்தோடுதான் இந்தப் பரப்புரைப் பயணத்தை நாம் தொடங்கினோம். ஆனால், மக்களிடம் இருக்கும் எழுச்சியைப் பார்க்கும்போது, 234 இடங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிதான் வெல்லப் போகிறது.

இந்த இலக்கினை நாம் அடைய, தேர்தல் நாளின் கடைசி நிமிடம் வரை மிகுந்த விழிப்போடு பணியாற்றிட வேண்டும்.

அதேபோல், மே 4-ஆம் தேதி, இறுதிச் சுற்று வாக்குகள் எண்ணப்பட்டு அதிகாரபூர்வ அறிவிப்பு வரும் வரை நமது தேர்தல் பணி தொடர வேண்டும்.

### தேர்தல் நாளின் கடைசி நிமிடம் வரை விழிப்போடு இருங்கள்!

**'வெல்வோம் 200' என்ற இலட்சியத்தோடுதான் இந்தப் பரப்புரைப் பயணத்தை நாம் தொடங்கினோம். ஆனால், மக்களிடம் இருக்கும் எழுச்சியைப் பார்க்கும்போது, 234 இடங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிதான் வெல்லப் போகிறது.**

நமது தலைவர் அவர்கள், கூட்டணித் தலைவர்கள் என எல்லோரும் பல நாட்களாகப் பரப்புரை செய்திருக்கிறார்கள்.

இந்தக் கடும் உழைப்பின் பயனை, மகத்தான தேர்தல் வெற்றியாக நாம் அறுவடை செய்திட வேண்டும். அந்தப் பொறுப்பினை உணர்ந்து, கழக நிர்வாகிகள், இளைஞர் அணி தம்பிகள் உட்பட அனைவரும் உழைத்திட வேண்டும்.

பாசிச சக்திகளையும் - அதிமுக அடிமைக் கூட்டத்தையும் நமது வாக்கு எனும் ஆயுதத்தால் வீழ்த்துவோம்.

**தலைவர், ஆட்சி தொடரட்டும்**
**தமிழ்நாடு வெல்லட்டும்!**

'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்ற நம் தலைவர் அவர்களின் குரல் மீண்டும் ஒலிக்கட்டும். திராவிட மாடல் 2.0 மலரட்டும்.

நம் மண், மொழி, பண்பாட்டைப் பாதுகாத்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தை அடுத்தகட்டத்துக்கு எடுத்துச் செல்வோம்.

தலைவர் தொடரட்டும் - தமிழ்நாடு வெல்லட்டும்!

**உங்கள்**
**உதயநிதி**

## தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு

# அகில இந்திய மலையாளி சங்கங்களின் கூட்டமைப்பு ஆதரவு!

### சங்கத் தலைவர் யூ. பிரேமன் முதல்வருக்கு கடிதம்!

சென்னை, ஏப்.23-

சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு அகில இந்திய மலையாளி சங்கங்களின் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது.

நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, அகில இந்திய மலையாளி சங்கங்களின் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது.

அகில இந்திய மலையாளி சங்கங்களின் கூட்டமைப்பின் அகில இந்திய தலைவர் யூ.பிரேமன் அவர்கள் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், "தங்கள் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைப் பொதுத் தேர்தலில் நிபந்தனையற்ற முழு ஆதரவு அளிக்கிறோம்" என உறுதி அளித்துள்ளார்.



திருச்சி மேற்கு சட்டமன்றத் தொகுதி வேட்பாளரும் அமைச்சருமான கே.என்.நேரு நேற்று முன்தினம் (21.4.2026) இறுதிக்கட்ட பிரச்சாரம் மேற்கொண்டார். வழிநெடுக பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.